தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 309/2019 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.**P.**ரோஸ் | | | |
| **Date** | **:** | **21.05.2026** | | | |
| **Time** | **:** | **10.45 a.m to 11.05 a.m** | | | |

தொ.த.சா.**1.**திரு.**P.**ரோஸ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

என்னை நிர்வாகம் 07.01.2015 அன்று பணி நீக்கம் செய்தார்கள். நான் பத்தாம் வகுப்பு எந்த பள்ளியில் படித்தேன் என்றால் நான் 9 ஆம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன். நாங்க 02.02.2010 அன்று வெல்டராக வேலைக்கு சேர்ந்தேன். நான் பயிற்சிக்கு சேர்ந்த பொழுது பத்தாம் வகுப்பு முடித்துள்ளதாகவும் ITI படித்துள்ளதாகவும் நிர்வாகத்திடம் சான்றிதழ் சமர்ப்பித்தேன் என்றால் இல்லை என் அனுபவத்தின் அடிப்படையில் தான் வேலைக்கு எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படுவது நான் நிர்வாகத்தில் பயிற்சிக்கு சேர்ந்த போது நிர்வாகத்திடம் கொடுத்த விண்ணப்பம் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**1**. அந்த விண்ணப்ப படிவத்தில் நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளதாகவும் ITI படித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால்

ஆமாம். மனிதவள அதிகாரி உமா என்பவர் அவ்வாறு எழுதி தர சொன்ன காரணத்தினால் எழுதிக் கொடுத்தேன். நான் கொடுத்த விண்ணப்பத்தில் கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தான் என்னை 01.08.2013 அன்று பணி நிரந்தரம் செய்தார்கள் என்றால் இல்லை. என் அனுபவத்தின் அடிப்படையில் தான் பணி நிரந்தரம் செய்தார்கள். நான் பத்தாம் வகுப்பு மற்றும் ஐடிஐ படித்து முடித்தேன் என காட்ட நிர்வாகத்திடம் சான்றிதழ் எதையும் ஒப்படைக்கவில்லை. நான் தவறான கல்வி தகுதி விவரங்களை கொடுத்து வேலையில் சேர்ந்த காரணத்தினால் நிர்வாகம் எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என்றால் தெரியாது. நான் தவறான கல்வி தகுதி விவரம் கொடுத்த காரணம் தெரிய வந்த பிறகு நிர்வாகம் எனக்கு எதிராக 02.09.2014 அன்று நிர்வாகம் எனக்கு எதிராக குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி அன்றைய தினமே தற்காலிக பணி நீக்கம் செய்தார்கள் என்றால் பணி நீக்கம் செய்தார்கள் ஆனால் பொய்யான குற்றச்சாட்டின் அடிப்படையில் செய்தார்கள். நான் போலியான சான்றிதழ் கொடுத்த வேலைக்கு சேர்ந்த காரணத்தினால் உரிமைகள் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் தெரியாது. நான் மோசடியாக வேலைக்கு சேர்ந்த காரணத்தினால் எந்த பரிகாரமும்

கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:21.05.2026.